# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி : 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 ஆனி—7, ஐ. ஆகிர்—21 (20 6-76) ஞாயிறு புத்தகம் 30, இதழ் 17


## தமிழ் தலைவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள

# ஐந்து குற்றச்சாட்டுக்கள்!

## அடுத்தமாதம் 12ந் தேதி சாட்சியங்கள் பதிவு!

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், சாவகச்சேரிப் பா.உ. திரு.வி.என.நவரத்தினம், காவலூர் பா.உ. திரு. கா.பொ. இரத்தினம், பருத்தித்துறை பா.உ. திரு. ச, துரைரத்தினம் ஆகிய நானகு தலைவர்களுக்கும் எதிரான குற்றப் பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 18 6.76ல் வெள்ளிக்கிழமை காலை மேற்படி தலைவர்களிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டது, இக்குற்றப் பத்திரிகையில் ஐந்து குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. அவசர காலச் சட்டத்தின் பல்வேறு விதிகளைத் தலைவர்கள் மீறியிருப்பதாக இக்குற்றப் பத்திரிகை கூறுகிறது.

குற்றப் பத்திரிகையில் காணப்படும் ஐந்து குற்றச் சாட்டுகளும் வருமாறு:-

(1) "தமிழர் கூட்டணியின் முதலாவது மாநில மாநாட்

—4-ம் பக்கம் பார்க்க

## இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் கண்டனம்

25-5-75இல் வெளியான சுதந்திரனில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமைப்பீடத்தைப் பற்றி ஆரம்பக்கத்தில் உள்ள கட்டுரையில் பின்வரும் கூற்று உண்மைக்கு மாறானது.

"அத்தகைய தலைமைப் பீடம் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் எவ்வித பங்கையும் எடுக்கமுன் வராது மறைந்திருந்து கொண்டது. மாறாக இன்று தலைமைப்பீடத்தை வழி நடத்திச்செல்லும் முக்கிய பேர்வழிகள் சிலரை வ. பொ. வுக்கு அந்தரங்கத்தில் ஆதரவு திரட்ட அனுப்பி வைத்தது.

பின்வரும் கூற்றுகள் முறையற்றவை—

(அ) துரோகப்பர்.

(ஆ) "மாற்றுரர்களின் எச்சில் இலைகளை நக்கும் இச் இறுநரி"

ஆதலால் இலங்கைப் பத்திரிகைப்பேரவை சுதந்திரன் பத்திரிகை ஆசிரியரைக்கண்டிக்கிறது.

## சுதந்திரன் ஆசிரியருக்கு எதிரான வழக்கு செலவுதொகையுடன் தள்ளுபடி!

### ப. நோ. கூ. சங்கத்தின் பல தில்லுமுல்லுகள் இன்னும் அம்பலமாயின!

தமிழர் தந்தை செல்வாவுக்கு வரவேற்பு அளிப்பதற்காக நிதி சேகரித்தார் என்னும் குற்றச்சாட்டில் திரு. க. யோகராஜாவை தற்காலிகமாக வேலை நிறுத்தம்செய்து, பின் நிரந்தரமாகவே ஆரைப்பற்று புதுக்குடியிருப்புப் பலநோக்குச் சங்கம் அவரை நிறுத்தி விட்டார்கள் என்று 4 5.75, 11—5—75 இல் ஆகிய சுதந்திரன் இதழ்களில் வெளிடப்பட்டிருந்த நிகழ்வுகள் உண்மைக்குமாறானவை என்றும், தவறானவை என்றும் ஆரைப்பற்றுப் புதுக்குடியிருப்பு ப நோ. கூ.ச. சுதந்திரன் ஆசிரியருக்கு எதிராகப் பத்திரிகைப் பேரவைக்கு முறையிட்டிருந்தது.

திரு. கா யோகராஜா சங்கத்தில் ஊழியர் அல்லவென்றும், தந்தை செல்வாவுக்கு வரவேற்பு அளிப்பதற்கு நிதி சேகரித்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் பதவிநீக்கம் செய்யப் படவில்லை என்றும் முறையீட்டாளர்பத்திரிகைப்பேரவைக்கு முறையிட்டிருந்தார்.

திரு. யோகராஜா அவர்கள் நிரந்தர விற்பனையாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தார் என்றும், அவர் நேர்முகப் பரீட்சையில் தேர்வு அடைந்து இருந்தும் நிறுவையில் குறை கண்டதின் நிமித்தம் அவருக்கு நிரந்தர விற்பனையாளர்பதவி கொடுக்கப்படவில்லையென்றும் சாட்சியம் பகர்ந்தனர்.

பத்திரிகைப் பேரவையின் விசாரணையில் திரு யோகராஜாவுக்கு 1974ம் ஆண்டு சித்திரை மாதம் தொடக்கம் 1975 மாசி மாதம் வரைக்கும் மாதாந்தமாக ரூபா 107/- சங்க நிதியில் இருந்து கொடுக்கப்பட்ட விடயம் சாட்சியத்தின் ஆவணச்சான்றாக ருசுப் படுத்தப்பட்டது. முறைப்பாட்டாளர் சார்பில் சாட்சியம் பகர்ந்தோர்கள், குறுக்கு விசாரணையின் போது யோகராஜாவை சங்கத்தில் சமயாசமய அடிப்படையிலேயே வேலைக்கு இருந்தார் என்றும் ஒத்துக் கொண்டனர். அத்துடன் திரு. யோகராஜா கூட்டுறவுச்சங்க 1-ம் கிளையில் இருந்து 3-ம் கிளைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும் சாட்சியத்தில் வெளிப்பட்டது.

5-ம் பக்கம் பார்க்க

## தமிழர் தூதுவரான தூதரகத்தில் தமிழேடுகளின் துணுககும் இல்லை!

### அப்பாலும் அடிசார்ந்த அடியவர்க்கு அடியாரின் கையாலாகத்தனம்!

இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவராக எந்தவொரு தமிழரையும் ஏன் நியமிக்கவில்லை யென்ற குற்றச் சாட்டை அடுத்து உலகத் தலைவர்கள் முன்னிலையில் இப்பிரச்சினையை பூசி மெழுகும் முறையில் ஆளும் இனத்தின் வடித்தெடுத்த அடிவருடியாகிய H. W. தம்பையா (முன்னாள் நீதியரசர்) அவர்களை இலங்கை அரசு, அண்மையில் இலங்கையின் கனடியத் தூதுவராக நியமித்ததை நாம் அறிந்ததே.

இவர் தலைமையில் இயங்கும் இத்தூதரகத்தில்தான் மேற்கூறிய எந்தவொரு தமிழ்ச்செய்திகளும் இல்லை. இதையொட்டி அங்கு வாழும் தமிழர்கள் முறையிட்டபோது, "நான் என்ன செய்யமுடியும் தம்பிமார்களே, இலங்கையை ஆளும் அரசு சிங்களச் செய்திகளையே அனுப்புகின்றது" என்று தனது கையாலாகாத தன்மையை எடுத்துக்கூறினாராம்.

அப்பாலும் அடிசார்ந்த அடியவர்க்கு அடியவராக விளங்கும் H. W. தம்பையா அவர்கள் வேறு என்னதான் செய்வார் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் முன்னாள் தலைவராக விளங்கிய இவர் தான் விரும்பியபடி ஆளும் கட்சிக்கு ... பிடிக்கும் வாய்ப்புக் கிடைக்காததினால் தம் பதவியைத் துறந்த பச்சோந்தி அல்லவா இவர்?

அவருக்குக் கிடைத்த பதவிகள் பலவும், பின்கதவால் கிடைத்ததென்பதும் தான் படித்த பள்ளிக்கூடத்தைச் சாட்டி அமைச்சர்களுக்கு விருந்து வைத்ததனால் கிடைத்ததென்பதும் நாடறிந்த உண்மையே.

இத்தகைய அடிவருடிகள் இலங்கை அரசியல் வானிலிருந்து அப்புறப்படுத்தப் படடாலன்றி ஈழம் வாழ் தமிழினத்துக்கு வாழ்வு இல்லை.

## திருமலை மாநாட்டின் ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெறுகின்றன

ஜுலை 10ம் திகதிகளில் திருகோணமலையில் இடம்பெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறப்பு மாநாட்டையொட்டிய ஏற்பாடுகள் மிகத் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதையொட்டி 11-6-76ல் திருகோணமலை கூடப்பட்ட சிறப்பு மாநாட்டு ஏற்பாட்டுக்குழுவின் விசேடபொதுக்குழுக் கூட்டமொன்றில், நடக்கவிருக்கும் சிறப்பு மாநாட்டினை இலங்கையில் இதுவரை எங்குமே நடைபெற்றிராத வகையில் சிறப்பாக நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

அன்று எடுத்துள்ள தீர்மானங்களின்படி இம் மாநாட்டை சிறப்புற நடத்துவதற்காக ஈழமடங்கிலும் உள்ள எல்லாத் தமிழ்த் தொகுதிகளிலும் இருந்து குறைந்த பட்ச நிதியாக

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத்தை நம்பிவாழும் பாலாதம்பு!

# தென்னிலங்கையோடு நிற்கட்டும் உங்கள் போதனை!

## நம்பி ஏமாற நாம் தயாரில்லை!

## கூட்டணி முடிவே தமிழர் முடிவு!

**வடபகுதியில் இப்பொழுது சுற்றுப்பயணம் செய்து சொற்பொழிவுகள் செய்துகொண்டிருக்கும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கப் பொதுச்செயலாளர் பாலாதம்பு அவர்கள் 'பாஷைப்பிரச்சனை தீர வழி' கூறியிருக்கிறார்.**

பாஷைப் பிரச்சனையென்பது மக்கள் தொடர்புகள் பற்றிய பிரச்சனையாகும்; ஐரோப்பிய இளைஞர்கள் இரண்டு, மூன்று மொழிகளைக் கற்றுக்கொள்கிறார்கள். அதுபோல தமிழர் ஏன் சிங்களம் படிக்கக்கூடாது. தமிழர் சிங்களம் படித்தால்தான் தமிழர் பிரச்சனைகளை சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துக்கூறமுடியும் என்று கூறியிருக்கிறார் திரு. பாலாதம்பு.

தனக்குச் சிங்களம் தெரிந்தபடியால்தான் ஒரு தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளராக இருக்க முடிந்ததாம் அவர் கூறுகிறார்,

தமிழைவிட சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மிகத் திறமையாக சொற்பொழிவாற்றுவார் இந்தத் தமிழர்.

தொழிற்சங்கம் கொடுக்கிற கொழுத்த சம்பளத்திற்காக, இவர் வேலை செய்யத்தானே வேண்டும். சிங்களம் தெரியாவிட்டால் சிங்களத் தொழிலாளர் இவரை ஏன் வைத்திருக்கப் போகிறார்கள்?

தொழிலாருக்காகப் பல மேடைகளில், இதுவரை பரிந்து பேசிவந்த பாலாதம்பு அவர்கள், இப்பொழுது வடக்கே வந்திருக்கிறார். தொழிலாளர் ஒற்றுமையைப் பலப்படுத்தவாம்.

வந்த வழியில் வாய்விட்டிருக்கிறார், மொழிப் பிரச்சனையில்—தமிழர் உரிமையில்.

தமிழர் விடுதலை முன்னணியால் எந்த உரிமையையும் பெற்றுக்கொள்ள முடியாதாம், பகிஷ்கரிப்பினாலும், சட்டமறுப்பினாலும், எதையும் சாதித்துவிட முடியாதாம், செல்லுகிறார் இந்தச் சட்டத்தரணி.

'அரசின் கொள்கைகளைப் பற்றி நீங்கள் சிந்திக்கக் கூடாது. சிங்களமொழி பெரும்பான்மையினரின் மொழி. எனவே சிங்கள மொழியைக் கற்றுக்கொள்வதன் மூலம் சிங்களவர் மத்தியில் சென்று எமது உரிமைகளைப்பற்றி கூறவும் செயல்படவும் முடியும். என்றும் பேசியிருக்கிறார் இந்த சட்டவாதி.

சிங்களம் படித்த இவர், இதுவரை, தென்னிலங்கையில், எத்தனை மேடைகளில் பேசியிருக்கிறார் தமிழர் உரிமை பற்றி? எத்தனை நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்?

சிங்கள அமைச்சரும் வடக்கே வந்து தமிழர் உரிமைக்காகப் பரிந்து பேசுகிறார்கள். ஒற்றுமைபற்றிப் பேசுகிறார்கள். தெற்கிலே போய் தமிழன் பிரிவினை கேட்கிறான் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்கிறார்கள்.

சிங்களம் தெரிந்த தொழிற்சங்கத் தமிழ்ச் செயலாளர், தமிழர் உரிமைகள் பற்றி, தனக்குத் தெரிந்த சிங்களத்தில், தென்னிலங்கையில், எந்த மேடையிலாவது பேசியவரல்ல. அவர் பேசியதெல்லாம் புரட்சிவாதம். இதுவரையில் செயல்படாத புரட்சிக்கு படைசேர்க்க வந்த வழியில், தமிழ்மொழி பற்றியும், தமிழர் உரிமைபற்றியும், தனக்குத் தெரிந்ததை சொல்லியிருக்கிறார்.

பெரும்பான்மை மக்களின் சிங்கள மொழிக்காக எத்தனையோ பேர் பரிந்துபேசி விட்டார்கள். இதுவரை, இத்தகைய கருத்துக்களை கொட்டியவர்களில் தமிழர் பலர். அவர்களெல்லாம் இன்று ஒற்றுமைப்பட்டுவிட்டார்கள். ஒரு கொடியின் கீழ் எமது ஒரே இலட்சியத்தில் கருத்துவேற்றுமையேயில்லையென்று கூறிக்கொள்ளதில் உள்ளம் பூரிக்கிறோம் இன்று. இங்குள்ள நிலை, செய் அல்லது செத்துமடி என்பதுதான்.

'இங்குள்ள தமிழர்களின் ஒன்றுதல் கண்டு' எட்டப்பர் கூட தம் தவறுணர்ந்து எம்பக்கம் சேரும் நிலை உருவாகிறது இன்று.

இந்த நாளிலேதான், எல்லாம் தெரிந்தவர்போல், மொழிப் பிரச்சினை பற்றி பேசுகிறார், பாலாதம்பு இங்கே வந்து.

தமிழீழ மக்கள் ஒரு உதயசூரியன் கொடியின்கீழ் ஒன்றுபட்டுவிட்ட நிலை தெரியாமல் பேசிவிட்டார். பேசுவதற்கு முன் நிலைமையை ஆராய வேண்டாமா? தொழிற்சங்க அனுபவம் படைத்தவராயிற்றே? இப்படியா ஆழம் தெரியாமல் காலைவைப்பது.

சிங்களம் படிக்க தமிழருக்குத் தெரியாது. என்றும் இவர்தான் மெத்தப்படித்து சிங்களத்தில் செயலாற்றுகிறார், என்றும் சொல்லவந்திருக்கிறார்.

அரசாங்க சேவையிலிருக்கும் தமிழ் வாலிபர்கள் சிங்கள இளைஞர் வியக்கத்தக்கபடி, சிங்களத்தில் திறமையாக எழுதப்படித்திருக்கிறார்கள். தமிழ் வாலிபர்கள் நினைத்தால் சிங்களத்தைப் படித்தே, சிங்கள வாலிபர்களை தோற்கடித்துவிடுவார்கள் தேர்வுகளில்.

ஆனால், நாம் எதிர்ப்பது ஏன்?

கட்டாயத்திணிப்பைத்தான் நாம் எதிர்க்கிறோம். சிங்களம் மாத்திரம் சட்டத்தை இயற்றிவிட்டு, சிங்களத்தை தமிழர் கட்டாயம் படித்துத்தானாக வேண்டும் என்கிறது அரசு. இதைத்தான் அநீதி என்கிறோம். இதற்காகத்தான், சிங்களம் படிக்கக்கூடாது, தமிழர். எமது உரிமைகள் கிடைக்கும்வரை என்கிறோம்.

திரு. பாலாதம்பு அவர்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

— தென்மட்டுவில்
வளவன்

---

## சங்கப் பலகை

### ஒற்றைப்பனை

ஒரு பனையின் பாகங்களில் எந்தப்பாகம் மனிதனுக்குப் பயனற்றது என ஆராய்ந்தால் எதுவுமேயில்லை. அதேபோன்றுதான் ஈழத்து இலக்கியச் சோலையினர் வெளியிட்டுள்ள ஒற்றைப்பனை எனும் சிறுகதைத் தொகுப்பிலிடம் பெற்றுள்ள பத்துக் கதைகளும் ஏதோ ஒருவகையில் பலனுள்ளவைகளாகவே அமைந்துள்ளன.

பதவியும், பணமும், பகட்டும் இருந்தும் — பற்றுக்கோடின்றி பரிதவிக்கும் பாவையின் உணர்ச்சிக் குமுறலின் ஓவியம் திருமதி. ந. பாலநாகேஸ்வரியின் அந்த முடிவு.

மனிதன் மிருகமாக மாறினாலும் அவனுள்ளே அவனுக்கே உரித்தான மனிதப் பண்பு மழுங்கிவிடுவதில்லை. சமயத்தில் அப்பண்பு எக்கொடியவனையும் தெய்வமாக்கிவிடுகின்றது. என்பதன் எடுததுக்காட்டு தி. மு. சிவராமுவின் கதவைத் தொட்டகை.

புண்ணிய தினத்திலே அந்நிய வருடத்தைக் கொண்டாடி 'சா'ப்பறை கொட்டி தம் சாதியைப் பறைசாற்றிபடி வாழுவோருக்கும், பாதைமாறிய தமிழருக்கும் பாடம் புகட்டி நிற்கிறது வ. அ. இராசரெத்தினத்தின் போர்ப்பறை.

அவள் அழகி, அறிவாளி, ஆசிரியை, சொல்லிலும் செயலிலும் இனிமையும், தூய்மையும் ஆனால், அக்கரைப்பச்சைக்கு ஆசைப்பட்டு அவளுக்கு அமைந்துவிட்ட பொருந்தாத் திருமணம் — பொசுங்கிவிட்ட வாழ்வு — குடியும், சந்தேகமும் குடும்பத்திற்கே கொள்ளி எனச் சொல்லி நிற்கும் தி. அரியநாயகத்தின் அவ்வளவுதான்.

தந்தையெப்படியோ மைந்தனும் அப்படி என்ற தத்துவததைச் சித்தரிக்கும் பாரதிபுரம் ந. சித்திரவேலின் பிராயச்சித்தம்.

பிறப்பதற்கென்றுகருவாகி காலத்தின் கோலத்தால், வறுமையின் வளர்ச்சியால் பிறக்குமுன்னே கரைக்கப்படும் பிறவாத உயிர்களுக்குப் பேசும் திறன்கொடுத்து உணர்வைத் தட்டுகின்ற உருக்கமான படைப்பாக அருள். சுப்பிரமணியத்தின் கருத்தோவியம்.

ஆண்மை கெட்ட ஆண், அவன் நெஞ்சில் ஆண் துணையை தேடி ஏக்கம்! இப்படியும் சில பிறவிகள்! சிந்திக்கத் தூண்டாவிடினும் கருவினிலே ஒரு புதுமை இ. ஏகாம்பரத்தின் யாருக்காக?

முதுகலையாம் நாடகக்கலையையும், முறைகெட்ட சினிமாவிற்கும் உள்ள முரண்பாட்டை சினிமாவின் சீரழிவை, நாடகத்தின் நல்வினையைச் சித்தரிக்கும் கி. விசுவலிங்கத்தின் மனமாற்றம்.

தாய்மையின் பூரணத்துவம் உடலால் அல்ல உள்ளத்தால். ஊரார் புரியாததை உற்றவன் புரிந்துகொண்டால் போதும் குடும்பத்தில் உண்மை அன்பிற்கு குறைவிராது என்பதை புடமிட்டுக் காட்டும் வீணை வேந்தனின் அத்திப்பூ.

ஒரு கை தட்டிச் சப்தமெழாது என்ற தத்துவத்திற்குச் சவாலாக, செய்வது நல்லதானால் தனித்தும்செய், பலனை எதிர்பாராதே—ஊர் முழுதும் இல்லாவிட்டாலும் ஒருவனாவது பயன் பெறுவான் எனக்கூறும் தாபி. சுப்பிரமணியத்தின் ஒற்றைப்பனை.

இப்படியே முத்தான பத்துக் கதை கொண்ட சிறுகதைத் தொகுப்பு. ஒற்றைப்பனை —திருகோணமலை சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஆற்றியபணியாக திரு. த. அமரசிங்கம் ஒற்றைப்பனையாக நின்று தனது ஈழத்து இலக்கியச் சோலை வெளியீட்டகத்தின் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

இச்சோலையில் இன்னும் பல மலர்கள் பூக்க வேண்டும்.

— நாவண்ணன்

புத்தகம் ஒன்றின் விலை. 3/-

---

# தமிழ்க் கன்னியொருத்தி

## மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார்

## பொலிசார் நடத்தும் கௌரவர் தர்பார்!

பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பர். ஆனால் பேயிலும் கொடிய மனம் படைத்த பொலிசாரினால் தமிழ் கன்னியொருத்தி மிருகத்தனமான முறையில், மிலேச்சத்தனமானமுறையில், மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்ட காட்டுமிராண்டித் தனமான முறையில் தாக்கப்பட்டதாக அறியப்படுகின்றது.

புலோலி கிராமிய வங்கி கொள்ளை சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் மயிலிட்டியைச் சேர்ந்த செல்விகள்—புஷ்பராணி, ஜீவரத்தினராணி, மங்கையர்க்கரசி (கல்யாணி) ஆகியோர் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைத்திருக்கப்பட்டிருப்பது [illegible] அறிந்ததே இவர்களில் [illegible] வும் கேவலமான முறையில் நடத்தியதாகவும், உள்ளாடைகளுடன் நிறுத்தி மேசையின் மீது கைகளை ஊன்றச்செய்த ஆண்பொலிசார் அவரது அந்தஆடைகளும் கிழிந்து போகக்கூடிய அளவிற்கு தடிகளால் தாக்கினார்களாம்.

அடியின் தாக்கத்தைத் தாங்கமுடியாத நிலையில் அப்பெண் மயக்கமுறும் வேளைகளில் ஏதோ குளிகைகளை அவர் வாயிற்போட்டு பலாத்காரமாக திணித்து "விழுங்கடி விழுங்கடி" என்று வற்புறுத்தி விழுங்கச் செய்து, திரும்பவும் அவர் மயக்கம் தெளியவே தொடர்ந்து அடித்துக் கொடுமைப் படுத்தியதாகத் தெரியவருகின்றது;

கொள்ளையில் சம்பந்தப்படுவதோ, சந்தேகத்தின் [illegible] கைது செய்யப்படுவதோ. அதற்குரிய தண்டனை வழங்குவதோ வேறு விடயம்: குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தான் — குற்றவாளியாகக் காண்பதும் தண்டிப்பதும் நீதிமன்றங்களைப் பொறுத்த விடயம். ஆனால் ஆண்பொலிசார் ஒரு இளம் பெண்ணென்றும் பாராது மிகவும் கீழ்த்தரமான முறையில் நடந்துகொள்வது, சேலைகளைந்து கௌரவதர்பார் நடத்துவது தமிழ் மக்களின் இரத்தத்தைக்கொதிக்க வைக்கும் ஒரு ஈனச்செயலாகக்காணப்படுகின்றது;

மேற்படி பெண்ணின் சகோதரர் ஒருவர் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் என்பதற்காக நீண்டநாட்கள்சிறையில் இருந்துவருகின்றார். இவர் அவரின் சகோதரியாக இருப்பதுதான் இவர்களின் இத்தகைய நடவடிக்கைக்குக் காரணமா என்று தமிழ் மக்கள் கேட்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 அம்சக் கோரிக்கை கோருவது உரிமை அல்ல சலுகை!

**தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சினைகள் தீரவேண்டுமாகில் சுயநிர்ணய அடிப்படையிலேயே பிரச்சினையை அணுகவேண்டிய நிர்ப்பந்தம் சிங்கள அரசுக்கு! காரணம் தமிழ்ப்பேசும் இனம் ஒரு தனித்தேசிய இனமாகவிருப்பதால்.**

**தமிழ்ப்பேசும் இனம் ஒரு தேசிய இனமாக அமைவதற்கு ஆதாரமாக இருப்பது அவர்களுடைய பாரம்பரிய தாயகம். ஆகவே அதனையும் அபகரிப்பதற்கான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் அவர்களுடைய பூமி பறிபோகிறது. ஆகவே தமிழ்ப்பேசும் மக்கள் தமது பிறப்புரிமைகளான சகல அடிப்படை ஜனநாயக மனித உரிமைகளையும் காத்துக்கொள்வதற்கு—அல்லது ஏலவே இழந்தவற்றை மீள்விப்பதற்கு, தமிழ் மண் காக்கப்படவேண்டியதே முதற்கண் செய்யப்படவேண்டிய தலையாய பணியாகும்.**

அல்ஜியேஸ் நாடு சுதந்திரமடைவதற்கு முன்பு மக்களின் அபிலாசையைப் புரிந்துகொள்ள ஆங்கு ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினார் பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர் டிகால். இன்று இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இழுபறிப்படும் காஷ்மீர் பிரச்சினையையிட்டு காஷ்மீரில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு பாக்கிஸ்தான் பிரதமர் பூட்டோ வற்புறுத்தி வருகின்றார். திரு. பூட்டோவின் குரலுக்கு அண்மையில் செஞ்சீனு வலுவூட்டியுள்ளது.

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய அடிப்படையிலேயே காஷ்மீர் பிரச்சினை அணுகப்படவேண்டுமென்பதற்கு உலக அபிப்பிராயம் சாதகமாக மாறிவருகின்றது.

இந் நிலையில் தமிழர் பிரச்சினையும் சுயநிர்ணய அடிப்படையில் தீர்வுபெற வேண்டிய காலகட்டம் நெருங்கிவிட்டது. தமிழ்ப்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு வலுக்கொடுப்பது தமிழ்ப்பேசும் மக்கள் ஒரு தனித்தேசிய இனமாக அமைவதற்கான அடிப்படைகள் அனைத்தையும் ஆதாரமாகக் கொண்டிருப்பது. அதில் பிரதானமானது மரபுவழித் தாயகம். ஆகவே அது கபளீகரம் செய்யப்படல்வேண்டும். சிறுகச் சிறுக ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் பெருமளவில் பயணளிக்கத் தொடங்கிவிட்ட பொழுதிலும் ஓர் இரு தமிழ்த்தேர்தல்தொகுதிகள் சிங்களத் தொகுதிகளாக மாறிவிட்ட பொழுதிலும், புத்தளம், வவுனியா உள்ளிட்ட வடகிழக்கு மாகாணங்கள் அடங்கலும் தமிழ்ப்பேசும் மக்களின் பெரும்பான்மையை சிங்களப்பெரும்பான்மையாகச் சடுதியில் மாற்றிவிட முடியாது. ஆக அது நடத்துமுடியுமட்டும் தமிழர் சிங்களவர் பிரச்சினையைப் பூரணமாகத் தீர்க்காது இழுத்தடிக்க சிங்கள அரசாங்கத்துக்குக் கால அவகாசம் தேவைப்படுகிறது: பிரச்சினை இறுதித் தீர்வு பெறுது தவிர்க்கப்படுதல் அரசுக்குச்சாதகமானது.

இந்த உண்மை தம்மைத் தாமே தமிழ்ப் பிரமுகர்கள் என்று கூறிக்கொள்பவர்களால் அரசாங்கக் கட்சி ஆதாரவாளர்களது பரிந்துரையின்மீது சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 அம்ச கோரிக்கையே போதிய அத்தாட்சியாகும்.

தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குள்ள அடிப்படை காரணத்தை அணுகாது மனித அடிப்படை ஜனநாயக உரிமைகளைத் தானும் அரசியல் அமைப்பில் நுழைக்க முயலாதும், அவற்றின் மீறுதல்கள் மீது தீர்ப்புவழங்கும் உரிமையை உயர் நீதிமன்றத்துக்குத் தராதும் அரசுக்கு வேண்டிய முன்சொன்ன கால அவகாசத்தை அளிக்கும் வகையில் உரிமைகளுக்குப் தில் சலுகைகளையே கோருகின்றது 20 அம்ச கோரிக்கை. தமிழர் இஸ்லாமியர் பிரதேச சிங்களக் குடியேற்றத்தில் இருந்து பாதுகாக்கப்படவும்— மீட்கப்படவும் அதில் மாற்றம் ஏதும் உரைக்கப்படாதென்றே போதும் தமிழ்ப்பேசும் இனம் தன்னைத் தனித்தேசிய இனமாகப் பிரகடனம் செய்வதற்கான வாய்ப்புக்களை எதிர்காலத்தில்லாவது இல்லாதொழிப்பதற்கு இக்குறுக்கு வழி கையாளப்படுகிறது!

இனி இதனைச் சாதிக்க முற்பட்டிருப்பவர்கள் யார்? தமிழ்ப் பிரமுகர்கள் என்று

## பலியாகும் படலத்திலிருந்து தம்மைத் தவிர்க்கட்டும்!

பேசப்பட்ட போதிலும் அவர்களை முடுக்கிவிட்டிருப்பவர்கள் கூட்டரசாங்கத்தின் பங்காளர்களான திரு. வி பொன்னம்பலம், திரு. என். வைத்திலிங்கம், திரு. எம். சி. சுப்பிரமணியம் பா. உ. ஆகியோரே!

தமிழ்ப்பேசும் இனத்தைத் கூறுபோடுவதற்காக இரு

நேர்ந்தபோது அந்நாட்களில் கூட்டுறவு இயக்கம் சுதந்திரமுடையதாக இருந்தமையால் வயல்களில் அறுவடைசெய்யப்பட்ட நெல்லை வயல்களில் வைத்தே கொள்முதல் செய்து பொது மக்களுக்கு விநியோகித்ததன் மூலம் மாஸ்கோ கம்யூனிஸ்ட்டுக்களில் சதிநோக்கை முறியடித்தது. வட பகுதியில் திரும்ப இயங்கி வந்த கூட்டுறவு இயக்கம் பின் கள்ளர் குகையாக மாற்றப்பட சத்தியாக்கிரக காலத்தில் அது மேற்கொண்ட மக்கள் பணியும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம்.

அரசியல் நேரடியாக இறங்காது வெறும் பார்வையாளர்களாக விலகியிருந்து

பேசும் மக்கள் வேண்டுவது இவர்களது மாயாஜால வார்த்தைகளுக்கு எடுபடவேண்டாம் என்பதே!

தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சினை இறுதித் தீர்வு பெறவேண்டிய காலகட்டம் அண்மித்துவிட்டது; தனித்தேசிய இனமென்ற ஆதாரமே அதன் அடிப்படை; சுயநிர்ணய உரிமை நிலைநாட்டப்படுவதே அதன் மார்க்கம்? வெண்ணெய் திரளும் நேரத்தில் கயவர் கைகளில் சிக்கி தாளியைப் போட்டுடைக்காதீர். முன்னு தபாலமைச்சர் திரு. சு நடேசபிள்ளையை முன்பு சத்தியாக்கிரக நாளில் முதலை உறுப்பினராக்கினர். ஒரு விசாரணைக் குழுவின் தலைவராக்கினர் தமிழர் பிரச்சினையை ஆராய்வதற்குசத்தியாக்கிரகம் 1961 ஏப்பிரல் 17ல் முறியடிக்கப்பட்ட பின் அந்தக் கமிஷனால் தமிழருக்குக் கிடைத்த பயன் பூச்சியம்.

ஒரு இனம், ஒரு மொழி, ஒரே மதம் இதுவே சகல சிங்களக் கட்சிகளுடைய கொள்கையும், பெரும்பான்மையான சிங்கள வாக்காளரின் விருப்பும் அதுதான் பெரும்பான்மையான சிங்களவாக்காளரது தலைக்கு மேலாக தமிழர்க்கு உரிமைகள் வழங்கப்படுமென எம்மை நாமே ஏமாற்றிக்

## இதன் பின்னணி சக்தி யார்? நாற்பதின்மர் உணரட்டும்!

பான்மைத் தமிழ் மக்களைத் தனிபினமாகப் பிரகடனம பண்ணியவர் பின்னவர். அதற்கு ஆமோதியவர்கள் முன்னிருவரும்.

இப்போது மட்டும்தான் இவர்கள் இப்படி அரசியல் குளறுபடிகளில் குதித்துள்ளார்களோவென்றால் கிடையாது. முன் அனுபவமும் இவர்களுக்கு இப்படிச் சதிவேலைகளில் உண்டு. 1961 சத்தியாக்கிரக போராட்ட காலத்தில் அதனை முறியடிக்க கச்சேரி சத்தியாக்கிரகம் — மறியல்போராட்டம் கைவிடப்படு மட்டும் பங்கீட்டரிசி விநியோகம் நிறுத்தப்படவேண்டுமென்று பரிந்துரை செய்தவர்கள் இவர்கள் தாம்; அப்போது உதவி உணவுக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தராக இருந்த திரு நித்தியானந்தன் ஏழை விவசாயிகள் தொழிலாளர் கச்சேரி மறியல் போராட்டத்தால் பாதிக்கப்படாதிருக்க கச்சேரியில் இருந்த தமது அலுவலகத்தை கச்சேரிக்கு வெளியே தானியக் களஞ்சியத்திற்கு மாற்றியதற்கு எதிராகக்கோஷ் மூட்டியவர்கள் இவர்கள். இவ[illegible] அரிஸிப் பங்கீடு தடைப்பட

வந்த கல்விமான்களும் பிரமுகர்களும் இவர்களது கபட நாடகத்தைத்தெரிந்து கொண்டிருக்க நியாயமில்லை. அறியாத்தனமாக எத்தி அனுப்பப்படாதிருக்க அவர்கள் சம்பந்தபட்டவர்களது அரசியல் பூர்வோத்திரத்தைத் துருவி ஆராய முற்படவேண்டும், தனிப்பட்ட வாழ்க்கையில் நேர்மையாளர்களாகவும், கண்ணியமானவர்களாகவும் விளங்கும் கம்யூனிஸ்ட்டுக்கள் கட்சி நலனுக்காக யார் கழுத்தையும் அறுக்கத் தயங்கமாட்டார்கள். இது உலக வரலாறு. ஈழத்தின் இடதுசாரி இயக்கம் சின்னாபின்னப்பட்டிருப்பதற்கு அடிப்படைக் காரணமே அதுதான்; தாம் விரும்பியதை ஈடேற்ற யார் காலையும் பிடிப்பார்கள், யார் தயவையும் நாடுவார்கள், எவரையும் பணயம் வைக்கப் பின்வாங்கமாட்டார்கள்.

இவர்கள் சூழ்ச்சியில் உருவான 20 அம்ச கோரிக்கையில் சிக்கிக் கொண்டுள்ள நல்லவர்களைத் தமிழ்ப் பேசும் மக்கள்

கொள்ளவேண்டாம். சிங்கள மக்களின் அபிலாசைக்குக் குறுக்கே நில்லாது சிங்கள இனம், ஒரே சிங்கள இனம், ஒரே சிங்கள மொழி, ஒரே பௌத்த மதத்துடன் அவர்களை வாழ அனுமதித்து தமிழ் இனமும் தான் வாழ முயல்வதில் தவறென்னகண்டீர்?

அறுவையால்காப்பாற்றப்படக் கூடிய நோயாளியைக் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்யாது, நோயைத் தீர்க்காது வேதனையை மட்டுமே தணிக்கும் மயக்க மருந்தை மிதமிஞ்சி ஊட்டும் கொடுமையைச் செய்யாதீர். நீங்கள் என்றென்றும் தமிழ் பிரமுகர்களாலே மதிக்கப்பட நீங்கள் செய்யக்கூடியது அதுவே. 20 அம்ச கோரிக்கைகளில் இருந்து உடனடியாக விலகிக் கொள்ளுங்கள்.

—திரவியம்

---

## வள்ளுவர் சிலை நிறுவ அறிவியக்கம் முயற்சி

இலங்கை அறிவு இயக்கத்தின் ஆறுவது ஆண்டு நிறைவுக் கூட்டம் கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயப் பங்குமண்டபத்தில் சென்ற வாரம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்தின் பின் சிற்றுண்டி விருந்தும், இயக்க உறுப்பினர் ஆதரவாளர் உறவாடலும் நடைபெற்றன. கொழும்பு—வள்ளுவர் விழாவில் அரங்கேற்றப்பட்ட 'அறுவடை' நாடக நலனுய்வு இறுதியில் நிகழ்ந்தது.

இ. அ. இ யின் மூன்றுவது சராண்டுக்கு உரியஅலுவலர்களாகப் பின்வருவோர் தெரிவுபெற்றனர். தலைவர்-திரு. வ. இராசையா, செயலர்-திரு. வை. பொ. கணேசானந்தன், பொருளாளர்-திரு. பொ. பழனிச்சாமி, அறிவுவட்டச் செயலர்-திரு. செ. வேலாயுதபிள்ளை, புத்தகவட்டச் செயலர்- திரு. மா. குலமணி, கலைவட்டச் செயலர்- திரு. சு. திருலோகச்சந்திரன், சேவை வட்டச் செயலர்-குரும்பசிட்டி கே. எஸ். சிவகுமாரன், கணக்காய்வாளர் திரு பொ. சிவசுப்பிரமணியம்.

புதிய தலைவர் இயக்கத்தின் பணிகள் பற்றி விளக்குகையில் மேற்கண்டவாறு கூறினார், "இலங்கையிற் பொருத்தமான ஓரிடத்தில் வள்ளுவருக்குச் சிலையொன்று நிறுவுதல் வேண்டும்; அதற்கானமுயற்சியை இயக்கம தொடங்கியுள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## புனித சுதந்திரத்துக்கு ஈடாகுமா?

இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்துக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை, இன்று நேற்று ஏற்பட்ட ஒரு பிரச்சினை அல்ல. ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பிரச்சினை இது. நாடு பிடிக்க வந்த போர்த்துக்கேயனிடம் என்றைக்கு தமிழன் தன்னுடைய நாட்டையும் அரசையும் யுத்த முனையில் பறிகொடுத்து அடிமைச் சேற்றுள் சிக்குண்டு அமுந்தத் தொடங்கினானோ அன்று முதல் தமிழினப்பிரச்சினை பிரச்சினையாகவே இருந்து வருகிறது.

1948ம் ஆண்டு ஆங்கில ஏகாதிபத்தியம் அகன்று தமிழினத்தின் மீது சிங்கள ஏகாதிபத்தியம் ஏறி உட்கார்ந்து கொண்ட நாள்முதல் கடந்த கால்நூற்றுண்டாக தமிழ்த்தேசிய இனத்தின் பிரச்சினைகள் நாள்தோறும் வளர்ந்துகொண்டே வந்திருக்கின்றன: இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சிங்கள அரசாங்கங்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கை — ஒப்பந்தங்கள்—சமரசங்கள்—ஒத்துழைப்புக்கள் அனைத்துமேசிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டன. 1972ம் ஆண்டு புதிய அரசியல் சட்டம் உருவாக்கப் படடபோதும்—அதற்கு முன்னரும் பின்னரும் — ஒரே இலங்கையில் சிங்கள மக்களுடன் சமநிலையும், சுதந்திரமும், சுயமரியாதையும் உள்ள இனமாக வாழுவதற்கு தமிழ்த்தேசிய இனம் எடுத்த இறுதி முயற்சிகளும் சிங்களத் தலைவர்களின் அதிகாரத் திமிரினால் முறித்தெறியப்பட்டுவிட்டன.

இவையெல்லாம் கலைந்த கனவுகள் ஆகிவிட்டன; அழிந்த ஓவியங்களாகி விட்டன;

தமிழ்த்தேசிய இனம் பழைய பாடங்களை மனதில்கொண்டு புதிய வலிவுடன் புதியகொள்கையுடன் புதியவேகமுடன் தனது விடுதலையாத்திரையை மேற்கொண்டிருக்கிறது.

எண்ணிலடங்கா தமிழ் இளைஞர் இன விடுதலை இலட்சியத்தை இதயத்தில் ஏற்றியபடி தங்களை விடுதலைவேள்வித் தீயில் அவித்துக்கொண்டிருக்கிறார்கள்; சிறைச்சாலையின் நெடுங்கதவுகளுக்குப் பின்னால் ஆண்டுக்கணக்காக தங்கள் வாழ்வை அழித்துக்கொண்டிருக்கிறார்கள். நாள்தோறும் அடியும், உதையும், மிதியும், சித்திரவதைகளையும் சகித்துக்கொண்டிருக்கிறார்கள்; ஆயுள் தண்டனைகளுக்கும், தூக்குமேடைக்கும் கூட அவர்கள் தங்கள் சித்தங்களைத் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வீட்டைவிட்டு வெளியேறி ஊர் ஊராக ஊண் உறக்கமின்றி அலைந்தபோதும் "சுதந்திரதேவி உன்னைத் தொழுதிடல் மறக்கிலோம்," என்று சிந்து பாடியபடி விடுதலை வீரர்களாக வேட்டை நாய்களின் கைகளுக்கு அகப்படாமல் எத்தனையோ இளைஞர்கள் வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்.

சிவகுமாரன் தன் உயிரையே காணிக்கையாக ஏற்கனவே தந்துவிட்டான்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் சிறைத் தண்டனைகளுக்கும் சொத்துப்பறிமுதல் போன்ற கொடுமைகளுக்கும் தயாராக காத்திருக்கிறார்கள்,

இந்தத் தியாகங்கள் — அர்ப்பணிப்புக்கள் எல்லாம் தமிழ்த்தேசிய இனத்தின் புனித சுதந்திரத்தையும்—விடுதலையையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடனேயே நிகழ்கின்றனவே அன்றி அற்ப சலுகைகளுக்காகவோ அரசியல் சட்டதிருத்தங்களுக்காகவோ அல்ல.

சட்டத்திருத்தங்களும் அற்பசலுகைகளும் சுதந்திர தரிசனத்தை நோக்கி புனிதயாத்திரை மேற்கொண்டிருக்கும் தமிழினத்தை ஒருபோதும் திசை திருப்பி விடப்போவதில்லை. தமிழினத்தை விடுதலைப் பாதையிலிருந்து திசைதிருப்பிவிடலாம் என்று கருதுபவர்கள் எண்ணம் மண்ணுவது திண்ணம்!

12 அம்சக் கூக்குரலோ — 20 அம்சக் கோரிக்கையோ—சுதந்திரக் கோரிக்கையை ஒருபோதும் ஈடு செய்ய முடியாது. பெட்டிசம்போட்டு பேச்சுவார்த்தை நடத்தி சலுகைகளுக்கு யாசித்து நின்ற காலம் மலையேறிவிட்டது. இன்றைக்குத் தமிழன் வேண்டுவது ஒன்றேஒன்றுதான். அதுவே சுதந்திரம்! சுதந்திரம்!! சுதந்திரம்!!!

மண்ணில் இன்பங்களை எண்ணிச் — சுதந்திரத்தின்
மாண்பினை இழப்போமோ?

கண்ணிரண்டும் விற்றுச் [சித்திரம்] வாங்கினல்
கைகொட்டிச் சிரியாரோ,

— பாரதி

# தமிழ்த் தலைவர்கள் சொத்துகள்பறிமுதலாகலாம்?

## எந்தவகைத் தண்டனையையும் எம் தலைவர்கள் ஏற்கத் தயார்!

ஜூரர்கள் அற்ற இந்த விசாரணையின் முடிவில் தமிழ்த்தலைவர்கள் நால்வரும் குற்றவாளிகள் எனக் கண்டால் அவர்களுடைய அசையும், அசைவற்ற ஆதனங்கள் யாவும் பறிமுதல்செய்யப்படலாம். உலகத்திலே ஆங்கில நீதிமுறை நடக்கின்ற நாடுகளில் ஒருவர் பாரதூரமான குற்றச்சாட்டிற்கு ஆளாகி இருந்தால் அவருடைய சமஅந்தஸ்த்துக்கொண்டவர் (ஜூரர்கள்)ளுக்கு முன்னிலையில் வழக்கு விசாரிப்பதுவே நடந்துவரும் நீதிபரிபாலனம்—இதற்கு முற்றிலும் புறம்பான முறையே இந்த நீதிபதிகள் முன் செய்யப்படும் விசாரணையான Trial at Bar.

—8-ம் பக்கம் பார்க்க

## ஐந்து குற்றச்....

—1-ம் பக்கத் தொடர்

டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்" என்ற தலைப்புக்கொண்ட ஶ்ரீலங்காவின் அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறும்படி அல்லது அதற்கு விரோதமாக நடக்கும்படி எவரையும் தூண்டக்கூடியதுமான எழுத்தாலான ஆவணமொன்றை 1976ம் ஆண்டு மே22ம் தேதி சொந்தக் கையிருப்பில் வைத்திருந்தது.

2. அதே நேரத்தில் அரசியல் சட்டத்துக்கு எதிராக மக்களைத் தூண்டக்கூடிய மேற்கண்ட ஆவணத்தை விநியோகித்தது.

3. மேற்கண்ட ஆவணத்தை பொலீஸ்மா அதிபரினதோ அல்லது வேறு பொலீஸ் அதிகாரிகளினதோ முன் அனுமதி பெறுமல் மேற்படி ஆவணத்தை விநியோகித்தது.

4. அதே நடவடிக்கையின்போது மேற்படி துண்டுப்பிரசுரத்தை (தமிழர் கூட்டணி மாநாட்டுத் தீர்மானங்கள்) வாசித்துக்காட்டியதன்மூலம் ஶ்ரீலங்கா குடிமக்களில் ஒருபகுதியினரான தமிழ்பேசும மக்களை சட்ட விரோதமான நடவடிக்கையின்மூலம் ஏற்கனவே சட்டமாகியிருக்கும் ஶ்ரீலங்கா ஒற்றையாட்சிக் குடியரசை மாற்றவேண்டும் என்ற கிளர்ச்சியை தூண்டிவிடப் பார்த்தது.

(5) மேற்கண்ட துண்டுப்ரசுரத்தை வாசித்ததன் மூலம் இலங்கைக் குடிமக்களில் ஒரு பகுதியினரான தமிழ் பேசும் மக்களிடையே அதிருப்தியைத் தூண்டிவிட முயற்சித்தது.

அரசுதரப்பு சாட்சியங்களாக கொழும்பு பொலீஸ் தலைமை நிலையத்தைச் சேர்ந்த சி. தர்மராஜா ஏ. எஸ் பி. யாழ் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸ் சார்ஜன் சம்சுதீன், நல்லூர் "சண்முகா" பதிப்பக உரிமையாளர் க. சண்முகநாதன் ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தலைவர்கள் மீதான வழக்கு விசாரணை ஜூலாய் 12ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் இருதரப்புச் சாட்சியங்களும் பதிவு செய்யப்படும். அதைத் தொடர்ந்து பல்வேறுவிதமான சட்டப் பிரச்சினைகளை [illegible] சார்பில் ஆஜராகும் சட்ட மேதைகள் கிளப்பவிருக்கின்றனர்கள்.

18ந் தேதி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராவதைக் காண்பதற்கு நீதிமன்றத்தின் உள்ளும் புறமும் ஏராளமான தமிழ் மக்கள் திரண்டிருந்தனர். குற்றஞ்சாட்டப்பட்டுள்ள திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், பண்டிதர். கா. பொ. இரத்தினம் க. துரைரத்தினம் ஆகியோர் சார்பில் மூதறிஞர் சா. ஜே. வே. செல்வநாயகம் கியூசி. தலைமையில் திருவாளர்கள் ஜீ ஜீ. பொன்னம்பலம் கியூ சி., குரேசேற் தம்பையா கியூ. சி., எம். திருச்செல்வம் கியூ சி., பி. நவரத்தினராஜா கியூ. சி. திரு. மு சிவசிதம்பரம் ஆகியோர் உட்பட ஏராளமான சட்ட மேதைகள் ஆஜராகியிருந்தனர்.

திரு. செல்வநாயகம் கியூ. சி. முதலில் எழுந்து குற்றஞ்சாட்டப்படுபவர்களின் சார்பில் தாம் ஆஜராவதாகவும் இவர்களுக்காக குறிப்பிட்ட சட்டத் தரணிகள் ஆஜராவதாகவும் குறிப்பிட்ட அவர் அவ்வழக்கு சம்பந்தமான சட்டப்பிரச்சினைகளைப்பற்றி தனது சகவழக்கறிஞர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் எடுத்துரைப்பார் என்றும் கூறினார்.

தொடர்ந்து திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் நால்வர் சார்பிலும் தனது சட்டக் கருத்தை பின்வருமாறு தெரிவித்தார்.

(1) இந்த நீதிமன்றம் சரியான முறையில் அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றமா?

(2) இப்போது உள்ள அரசியல் அமைப்புச் சட்டம் செல்லுபடியாகுமா?

இந்த விடயங்கள் பற்றி விவாதிப்பதற்கு போதிய அவகாசம் தேவை என்றும் அதனை மனதில்கொண்டு விசாரணைத் தேதியை நியமிக்குமாறும் கூறினர்.

அத்துடன் இந்த நால்வரும் பிரபல்யமானவர்களானபடியால் ஏனைய சாதாரண குற்றவாளிகளுக்கு விதிக்கப்படுவதுபோல் பிணை விதித்தல் தகாது ஏனெனில் அவர்கள் எந்த நிலையிலும் எச்சந்தர்ப்பத்திலும் தாமாகவே நீதிமன்றத்தில் ஆஜராகக் கூடியவர்கள் எனவே இவர்களை நிபந்தனையற்ற விதத்தில் சென்றுவர அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் இவர்களுக்கு வேறுயாரும் பிணைநிற்கத் தேவையில்லையென்றும் தமது சொந்தப் பிணையிலேயே இவர்கள் சென்றுவரலாம் என்றும் கூறி சாட்சியங்கள் பதிவதற்கான நாளை ஜூலை 12 திகதிக்கு ஒத்திவைத்தார்.

# உள்ள உரிமையை உபயோகிக்கத் தயக்கமேன்?

பொலிஸ் திறைச்சேரிச் சட்டத்தின் படி இலங்கையில் உள்ள எந்தப் பொலிஸ் நிலையத்திலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் இவற்றில் தாம் விரும்பிய ஒருமொழியில் தமது முறைப்படுகளைப் பதவிசெய்யும் உரிமையுள்ளது.

இவ்வுரிமையை தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் உபயோகப்படுத்துகின்றனர். மற்றைய இடங்களில் இதை உபயோகிக்கத் தயங்குவதேன்?

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்வதற்கென்று நியமிக்கப்பட்டிருப்பவர், முறைப்பாட்டாளர் விருப்புமொழியிலேயே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார். அங்கு கடமை புரிபவருக்கு முறையீட்டாளரின் மொழி தெரியாத பட்சத்தில், அங்கு இருக்கும். முறையீட்டாளரின் மொழிதெரிந்த இன்னுமொருவரைக்கொண்டு முறைப்பாட்டினைப் பதிவு செய்யவேண்டிய கட்டாயக் கடமையுள்ளது.

அப்படியும், முறையீட்டாளரின் மொழி தெரிந்தவர் ஒருவரும் அங்கு இல்லையெனக் கண்டால் முறையீட்டாளரே அங்கு இதற்கென்று வைக்கப்பட்டிருக்கும் விசேட புத்தகமொன்றில் தனது சுயமொழியில் தன்கைப்பட முறைப்பாட்டினை எழுதும் உரிமையுள்ளது. அவர் எழுதும் முறைப்பாட்டின் பிரதியொன்றும் முறைப்பாட்டாளருக்குக் கொடுக்கப்படும்.

முறையீட்டாளருக்குப் புரியாத மொழியிலே முறைபாட்டைப் பதிவுசெய்யும் பொலிசார் முறையீட்டாளரின் சம்மதத்தின் பேரிலேயே அம்மொழியில் பதிவு செய்வதாகக் கீழே எழுதி முறையீட்டாளரிடம் கையொப்பம்பெற்றுக்கொண்டு விடுவதால்—பின்பொரு சமயத்தில் முறையீட்டாளர் தனக்குப் புரியாத மொழியில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதால் முறைப்பாடு சரியான முறையில் பதியப்பட்டிருக்கவில்லையென்று வாதிடமுடியாத நிலை ஏற்படுகின்றது, என்பதை இது விடயம் பற்றி நன்கு அறிந்தவர்கள் பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும்மோர் 58 ஏற்படலாம்?

## "லண்டன் எக்கொனெமிஸ்ற்றி"ன் ஆரூடம்!

## இந்திராவின் பாதையிலே இலங்கைப் பிரதமர்!

## அரசை அச்சுறுத்துகிறதாம் தனிநாட்டுக் கோரிக்கை!

● சர்வதேச அறிக்கை ஏடான "லண்டன் எக்கொனேமிஸ்ற்" (LONDON ECONOMIST) ஏடு இலங்கையின் நிகழ்கால நிலமையையும். இந்நிலைமை ஏற்படக் காரணத்தையும் ஆராய்ந்து அறிந்து தமது 1975 யூன் 5-ம் திகதி ஏட்டில் 'இலங்கைத் தமிழர் பிரச்சினை' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளது. எனவே இலங்கைத் தமிழர் பிரச்சினை இப்போது உள்நாட்டுப் பிரச்சினையல்ல உலகறிந்த பிரச்சினை. அக்கட்டுரையை தமிழாக்கம் செய்து வெளியிடுகின்றோம்.

—ஆர்.

இந்திய முதல்வர் திருமதி இந்திராகாந்தியை பல விடயங்களில் பிரதிபலிக்கும் திருமதி பண்டாரநாயக்கா அவர்கள் இன்று இலங்கையை ஒரு சிறு அவசர காலத்திற்கும் உட்படுத்தியுள்ளார். இந்திராபோல் இலங்கையும் எதிர்ப்பியக்கத்தை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இவ்வித முயற்சியில் ஈடுபடுகையில் இனிப்புப் பூசிய சில பொருளாதார முறைகளையும் இது கொண்டுள்ளது. நாட்டின் நலனைப்பாதிக்கும் சில வெளியீடுகள் எதனையும் வெளியிடுவதையோ அல்லது பரப்புவதையோ ஒரு சில அவசரகாலச் சட்டங்கள் தடுக்குகையில் ஏனைய விலைக்கட்டுப்பாடுகளை விதித்து மற்றும் ஏனைய நுகர்வோர் பாதுகாப்புகளை அளிக்கின்றன. இப்பிரச்சாரத்தை சமசமாஜக்கட்சியினர் அரசாங்கத்திற்கு எதிராக 20000 வெளியீடுகளை வழங்கியுள்ளன.

தமிழரசுக்கட்சியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட இப்பிரசாரத்தில் ஈடுபட்ட பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால் இந்தியாவில் போலன்றி பெரும் எதிர்ப்பைத் தெரிவிக்கக்கூடிய டாக்டர் என்.எம் பெரேரா போன்றோரை சிறையில் வைக்கவேண்டாம் என்று காவற்துறையினர்க்கு அரசு கட்டளையிட்டுள்ளது.

சென்ற மாதத்தில் தமிழர் விடுதலை முன்னனி ஒன்று அமைக்கப்பட்டதே திருமதி பண்டாரநாயக்கா அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு முக்கிய காரணமாய் விளங்குகின்றது. இவ்வியக்கத்தின் வெளிப்படையான தனிநாட்டுக் கோரிக்கை நாட்டின் அரசை அச்சுறுத்தும் முறையில் அமைகிறது. அத்துடன் இவ்வியக்கம் 14இலட்சம் மரபுவழியான இலங்கைத் தமிழர்களையும், சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்ய இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய மரபுவழித் தமிழர்களையும் ஒன்றிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் மேலாக புதிதாக உருவாக்கப்பட்ட இவ்வியக்கம் தனிநாட்டுக் கோரிக்கை என்ற அடிப்படையிலும் அன்றி வேறு எந்த அடிப்படையிலும் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில்லை என்றும் முடிவு செய்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தபின் தமிழரின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் அமைதி நிலவுகிறது. ஆனால் தனிநாட்டு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ள தமிழ் இளைஞர்கள் மீது அங்குள்ள காவற்படையினர் மிக்க கவனம் செலுத்திவருகின்றனர் சிங்களம் மட்டும் சட்டத்தை மறைந்த பண்டாரநாயக்கா கொண்டுவந்ததையடுத்து 1958ல் இனக்கலவரம் ஏற்பட்டது போல் மீண்டும் ஒரு இனக்கலவரம் ஏற்படுவதைத் தடுக்க திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா உறுதிபூண்டுள்ளார். தமிழர்களின் இணைப்பாட்சிக் கொள்கையை அன்று ஏற்க மறுத்த சிங்கள இனம் இன்று தமிழர் விடுக்கும் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்கப்போவதில்லை என்பது உறுதி. ஆனால் தமிழர்கள் பொறுமையை இழந்தவர்களாயும் விட்டுக்கொடுக்க மறுப்பவர்களாயும் காணப்படுகின்றார்கள். எனவே தான் 1958ல் இனக்கலவரம் மீண்டும் ஏற்படக்கூடும் என்று மக்கள் தமக்குள் கதைக்கிறார்கள்.

## திருமலை மாநா...

—1-ம் பக்கத் தொடர்

ரூபாய் 1000/- தந்துதவும் வண்ணம் சிறப்பு மாநாட்டின் தலைவர் திருகோணமலை பா உ. திரு. பா. நேமிநாதனும் மாநாட்டின் இணைச்செயலாளர்களில் ஒருவரான மூதூர் பா. உ. திரு. தங்கத்துரை அவர்களும்வேண்டுகோள் விடுத்துள்ளனர்,

இதற்கான நிதிப்பட்டியல்கள் ஒவ்வொரு தமிழ்தேசிய பேரவை உறுப்பினர்களுக்கும், கிளை அமைப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அடுத்து, வெளிமாவட்டங்களில் இருந்து மலைநாடு உட்பட மாநாட்டிற்கு வரக்கூடிய தொண்டர்கள் அனைவர்களதும் உணவு, உறையுள் வசதிகள் நலன் கருதி ஏற்பாடுகள் செய்துகொடுப்பதற்காக ஈழமடங்கிலும் உள்ள — இயக்கங்கள், கிளைகள் — தே. பே. உறுப்பினர்கள் மூலமாக, பங்குகொள்ள வருவோரின் உத்தேச பெயர்ப்பட்டியல்களை ஆண், பெண் தொகையினர் எவ்வளவு என்று குறிப்பிட்டு திரு. வீர. சுப்பிரமணியம் இணைச் செயலாளர், மாநாட்டு இணைப்பு அலுவலகம், 9 இராஜவரோதயம் வீதி, திருக்கோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் மாநாட்டின் தலைவர் திரு. பா. நேமிநாதன் பா. உ. இணைச்செயலாளர்கள் திரு. அ. தங்கத்துரை பா. உ. திரு. வீர. சுப்பிரமணியம் ஆகியோர் கூட்டு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சுதந்திரன் ஆசிரிய...

—1-ம் பக்கத் தொடர்

1975 மாசி தொடக்கம் சித்திரைவரையும் யோகராஜா சங்கக்கிளை முகாமையாளருக்குகீழ் வேலைசெய்து ரூபாய் 40/- மாதாந்த படியாகப் பெற்றார் என்பதும் சாட்சியத்தில் வெளிப்பட்டது இதன்பிறகு 75-ம் ஆண்டு சித்திரை மாதம் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் ருசுப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. யோகராஜா தனது சாட்சியத்தில் தான் ஒரு தமிழரசுக்கட்சி தொண்டரென்றும் தமிழர் தந்தை செல்வாவுக்கும், சிறையிருக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தனுக்கும் வரவேற்புக்கு நிதி சேகரித்தார் என்றும் இதன் பொருட்டே தான் தனது சமயாசமய விற்பனையாளர் பதவியில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டு இடையில் வேலைநீக்கம் செய்யப்பட்டதாகவும் கூறினர். திரு. யோகராஜாவின் சாட்சியத்தை பத்திரிகைப் பேரவை முழுமையாக ஏற்றுக்கொண்டதுடன் சுதந்திரன் ஆசிரியருக்கு எதிராக கொடுத்த வழக்கினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்துள்ளது.

பத்திரிகைப் பேரவை தனது தீர்ப்பில் வேறு சில ஊழியர்கள் இச்சங்கத்தில் பாரதூரமான குறைவான நிறை, போன்ற தவறுகள் புரிந்ததற்காக நீதிமன்றங்களிலே குற்றப்பட்டவர்களும் தவறுகள் விட்டவர்களும் நன்நடத்தையாய் இருக்கும்படி எச்சரிக்கப்பட்டோரும் [illegible] சங்கத்தில் கடமையாற்றி வருகின்றார்கள் இந்தப் ப.நோ. கூ. சங்கத்தில் பெரும்பான்மையான ஊழியர் தொழிற்சங்கச் சட்டத்திற்கும் கூட்டுறவு உபவிதிக்கும் முரணாக, சமயாசமய அடிப்படையில் வேலைசெய்வது எங்களுக்கு அதிசயமாக இருக்கின்றது என்றும், என்றும் பத்திரிகைப் பேரவை தீர்ப்பில் கூறப்பட்டது. திரு. தியாகராஜா சங்கத்திற்காக ஆஜரானார், சட்டத்தரணி திரு. செ. வே. விவேகானந்தன் சுதந்திரன் ஆசிரியருக்காக ஆஜரானார்.


# ஆங்கிலம்

உங்களுக்கு ஆங்கிலம் பேச, வாசிக்க, தெரியாதெனக் கவலைப்படுகிறீர்களா? "கவலை வேண்டாம்" இன்று உங்களுக்கு ஆங்கில அரிச்சுவடியே தெரியாதிருந்தாலும் அடுத்த மாதத்திலிருந்து ஆங்கிலம் பேசத்தொடங்குங்கள்.

தொழில் பெறவும், சமுதாயத்தில் உயர் அந்தஸ்து வகிக்கவும், உத்தியோக உயர்வுபெறவும் ஆங்கிலம் அவசியமே.

சிறியோருக்கும், பெரியோருக்கும் ஆசிரியர் உதவியின்றி ஒரேமாதிரிப் படிக்கக்கூடிய முறையில் விளக்கங்களுடன் எழுதப்பட்ட ஆங்கில பயிற்சிப் புத்தகம்.

ஆங்கிலப் பாஷையும் பேச்சுப் பயிற்சியும்

**விலை ரூபா 5-90**

தபால்செலவு -/75. வி. பீ.யில் அனுப்பப்படும்

**விக்டரி ஹோல்,**

(பௌத்த மந்திரய)

203, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை, கொழும்பு-11

கீழ்க்கண்ட முகவரியில் புத்தகங்களை நேரடியாக மட்டும் பெறலாம்.

**லீலா ஸ்டோர்ஸ்,**

அரசமரச் சந்தி—புறக்கோட்டை.



மில்க்வைற் சோப் தயாரிப்பாளர்களின் ஆதரவில் கமலாலயம் கலைக்கழகம் அளிக்கும்

**தடிச் சாமியார்**

(வானொலி தொடர் நாடகம்)

4 - 7 - 1976 முதல் பிரதி ஞாயிறுதோறும் பிற்பகல் 3-30 மணிக்கு வானொலியில் கேட்டு மகிழலாம்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்.**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் முந்திய தலைமைப்பீடம் சுதந்திரன் ஆசிரியருக்கெதிராகப் பத்திரிகைப் பேரவையில் தொடுத்த வழக்கின் விபரம். அவர்கள் நினைத்ததென்ன? நடந்ததென்னவென்பதை தொடர் கட்டுரையாகத் தருகிறோம்.

—ஆர்,

# கேட்டதென்ன? கிடைத்ததென்ன!

**25-5-75இல் சுதந்திரனில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் அன்றைய தலைமைப் பீடத்தைப்பற்றி ஒரு கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது. அக்கட்டுரை 'உண்மை விளம்பி' என்பவரால் எழுதப்பட்டிருந்தது.**

அக்கட்டுரையில் அவதூறானதும், தப்பானதும், சங்க வளர்ச்சிக்குப் பாதகமான வகையிலும், சங்கத்திற்கும் தமிழ் அரசியல் நிறுவனங்களுக்கிடையிலும், பாரதூரமாக சிண்டு முடித்துவிடும் வகையிலும், பொதுமக்களிடையே சங்கப் பொது உறுப்பினர்களிடை தவறு பிரசாரமூலம் தமிழினத்திற்கும், மொழிக்கும், சங்கம் ஆற்றிவரும் சேவைக்கு ஊறுவிளைவிக்கும் வகையிலும், அமைந்துள்ளதோடு மன்றி எவ்வித ஆதாரமும் அற்றதாக அமைந்துள்ளதென்று அரசாங்க எழுதுவினைஞர் சங்க செயற்குழு தீர்மானித்து இருப்பதாக அன்றைய 75ம் ஆண்டின் தலைவரான திரு. சதா தனபாலசிங்கம் அவர்கள் பத்திரிகைப் பேரவைக்கு முறைப்பாடு ஒன்றினை சமர்ப்பித்திருந்தார். அக்கட்டுரையில் முக்கியமாக பின்வருவனவற்றை தவறான செய்திகள் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

(1) "சென்ற ஆண்டு மன்னாரில் நடந்தேறிய ஆண்டுப் பொதுக்கூட்டத்தில், தற்போது பதவியில் இருக்கும் தலைமைப்பீடம், மூதறிஞர் செல்வாவின் பெயரைக் கூறி, படத்தைக் காட்டி பதவியைக் கைப்பற்றியது. அத்தகைய தலைமைப்பீடம் இந்நாட்டுத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமான காங்கேசன்துறை இடைத்தேர்தலில் எவ்வித பங்கையும் எடுக்க முன்வராது மறைந்திருந்து கொண்டது; மாறாக, இன்று தலைமைப்பீடத்தை வழிநடத்திச் செல்லும் முக்கிய பேர்வழிகள் சிலரை வ. பொ வுக்கு அந்தரங்கத்தில் ஆதரவு திரட்ட அனுப்பி வைத்தார்கள்."

(2) "இன்றுவரை தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகள் எதிலும் பங்கு கொள்ளாது ஒதுங்கி இருந்துவரும் இத் தலைமைப்பீடம், அவ்வப்பொழுது தமிழ்க் கூட்டணித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எதிராக நஞ்சுக் கருத்துக்களை கொட்டிவரத் தவறுவதில்லை."

(3) "பொதுச் சபையால், மிகப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட நா; பாலசுப்பிரமணியம் தமிழரசுக்கட்சி தமிழர் கூட்டணி ஆகியவற்றின் ஆரம்பகாலத் தொண்டர்: அவர்களை தேர்தல் நடந்த நாள் தொடக்கம் கடமையாற்ற முடியாதவாறு நிமிடத்திற்கு நிமிடம் தொல்லைகள் கொடுத்து, இறுதியில் அவரை இடை நிறுத்தம் செய்துள்ளார்."

(4) "என் காலத்தில் சங்கம் உடைந்தொழிந்தால் அதுவும் எனக்கோர் பெருமையே என்று சங்கத் தலைமைப்பீடம் கூறிவருவதாகவும் இன்னும் சில தவறான நிகழ்வுகளும் சுதந்திரன் கட்டுரையில் உள்ளது" என்று திரு. சதா தனபாலசிங்கம் அவர்கள் பத்திரிகைப் பேரவைக்கு முறையிட்டிருந்தார்.

அவரின் முறைப்பாட்டின் பேரில் பத்திரிகைப்பேரவை சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்களை எதிராளியாக அழைத்து விசாரணை ஒன்றினை நடத்தியது. இவ்விசாரணை ஏறக்குறைய நாலு நாட்கள் நடைபெற்றது. திரு. சதா தனபாலசிங்கத்தின் சார்பில் சட்டத்தரணி, திரு. எஸ். மகேந்திரன் அவர்கள் ஆஜராகினார். சுதந்திரன் ஆசிரியரின் சார்பில் சட்டத்தரணி திரு. செ. வே. விவேகானந்தன் ஆஜராகினார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் இன்றைய தலைமைப்பீடம் இந்த வழக்கினை வாபஸ் பெறும் பொருட்டு பத்திரிகைப் பேரவைக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்திருந்தது. பத்திரிகைப் பேரவை இம் முறைப்பாட்டினை திரு. சதா தனபாலசிங்கம் அவர்களின் தனிப்பட்ட முறைப்பாடாகவே கருதி விசாரணை நடாத்தியது?

இந்த விசாரணையின் முடிவில் பத்திரிகைப் பேரவை முன்பக்கத்தில் போடப்பட்டிருக்கின்ற விடயங்களை மட்டுமே முறையற்றனவாகவும், உண்மைக்கு மாறானதாக இருப்பதாகவும் தீர்ப்பளித்து இருக்கின்றது. மற்றைய விடயங்களில் முறையீட்டாளரான திரு சதா தனபாலசிங்கம் அவர்கள் தனது முறையீட்டில் வெற்றி பெறவில்லையென்பது குறுப்பிடத்தக்கது.

பத்திரிகைப் பேரவையின் தீர்ப்பின் முக்கிய சாரம்சத்தை விசாரணையில் அளிக்கப்பட்ட முக்கியமான சாட்சியங்களை அடுத்துவரும் சுதந்திரனில் வெளியிடுவோம்.

— தொடரும்



## பொன்மொழியும் என் மொழியும்!

—"கடுகு"

"நாட்டில் இனவெறியையும்வெறுப்பையும்ஒருமுறை தூண்டிவிட்டால் அதனைக் கட்டுப்படுத்துவது இலகுவானதல்ல."

—பிரதமர்.
(ஈழநாடு 2.6.76)

அம்மையே! இந்த அறிவுரையை உங்கள் கணவருக்குக் கூறியிருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்குமா? இருபது வருடங்களுக்குப் பின்னராவதுஇந்தது 'அறிவு' ஏற்பட்டது பற்றி, மகிழ்ச்சி தான்!

●

"முக்கியமான பிரச்சினைகள் உண்டு என்பதனை நான் மறுக்கவில்லை. ஆனல் அவை தீர்க்கப்படமுடியாதவை என்று கருதவில்லை. இப் பிரச்சினைகள் எதிர் நடவடிக்கையால், அல்லது நேரடி மோதல்களினுல் தீர்க்கப் படமுடியாது. பரஸ்பர நல்லெண்ணத்தாலும் பேச்சு வார்த்தைகள் மூலமாகவும் தான் தீர்க்கப்படமுடியும்."

—பிரதமர்.
(தினகரன் 2.6.76)

"பிரச்சினை உண்டு" என்றோம், 'இல்லை' என்றீர்கள். இன்று உண்டு" என்கிறீர்கள்!

"பேசுவோம் பிரச்சினை பற்றி" என்றோம்! கேட்டும் கேளாததுபோல் இருந்தீர்கள்!

இன்று "பிரிவோம்" என்கிறோம்! நீங்கள் இப்போது தான் "பேசலாம்" என்றீர்கள்!

தமிழ்ப் பேசும் இனம் "முட்டாள் இனம்" என்று எண்ணுகிறீர்களா?

●

"நான் ஏன் பொதுத்தேர்தலைக் கண்டு பயப்படப் போகிறேன்?"

—பிரதமர்
டெயிலி மிறர் 6-6-76;

அம்மா பேசுகிறது மகனுக்கும் அவருடைய ஆதரவாளருக்கும் கேட்கவில்லையோ, அல்லது புரியவில்லையோ தெரியவில்லை. முதலில் உங்கடை ஆட்களுக்குச் சொல்லுங்கள் அடிக்கடி. 77ல் தேர்தல் வேண்டாம் என்று சொல்கிறார்கள் — அம்மாவுக்கும் ஆட்களுக்குள்ளேயும் கருத்துவேறுபாடோ அல்லது இதிலவேற மர்மம் இருக்குதோ என்று பலர் கதைக்கினம்,

## சித்தாண்டியில் பொலிசார் நகரசுத்தியும் செய்கிறார்களாம்!

சித்தாண்டியில் 14-6-76ல் ராசன் செல்வநாயகத்திற்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது தமிழ்த்தலைவர்களையும், தமிழர் கூட்டணியையும் அங்கு கூடியிருந்த சிறுவர்கள் முன் தன்வாயினையைத் திட்டித்தீர்த்தாரராம். இவரின் இந்தச் வார்த்தைகளை அக்கினி பகவானல் பொறுக்கமுடியாமல் போனது தானோ என்னவோ பந்தலிலே கட்டியிருந்ததோரணம் திடீரெனத் தீப்பற்றி எரிந்ததாம்.

இச்சம்பவத்தையடுத்து பொலிசார் தமிழ் இளைஞர்களை வேண்டையாட மோப்பம் பிடித்துத்திரிகின்றனராம். அப்பாவித் தமிழ்இளைஞர்கள் சிலரின் வீடுகளுக்குச் சென்று அவர்கள் பெற்றோரிடம் உதயசூரியன் கொடியிருந்தால் அவற்றைத் தரும்படி பயமூறுத்துவதுடன் அவர்கள் பிள்ளைகளை தம்மிடம் ஒப்படைக்காவிட்டால் அவர்களைக் கைதுசெய்யப் போவதாகவும் மிரட்டுகின்றார்களாம்.

ராசன் வருகை தருவதற்கு முதல் இரவு வீதிகளிலே எழுதப்பட்டிருந்த வெள்ளை எழுத்துக்களை வாகனங்களின் மூலம் தண்ணீர் கொண்டு வந்து அழிக்க முயன்றும்—மணல் அள்ளிப் போட்டும் மறைக்கமுடியாது போகவே — காக்கி உடையுடன் நகரசுத்திசெய்யும் நிலைக்கு இந்த இளைஞர்கள் தம்மை ஆக்கிவிட்டதும் பொலிசாரின் இந்தக்கோபத்துக்குக் காரணமாய் இருக்கலாம் என்றும் பேசப்படுகிறது:

### இளைஞர் கைதாகி விடுதலை

இந்த வரவேற்புக்கு எதிராக சுவரிலக்கியம் படைத்தார் என்ற சந்தேகத்தின் பேரின் வந்தாறுமூலையைச் சேர்ந்த கு. ஆறுமுகம் என்ற இளைஞர் 12-6-76 இரவு கைது செய்யப்பட்டு 14-6-76 மட்டக்களப்பு நீதிமன்றத்தில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

## தபால் அலுவலகத்தில் தமிழ் புறக்கணிப்பு!

முழுக்க முழுக்கத் தமிழர்களே வாழும் பகுதியான கொழும்பு-13, விவேகானந்தா மேட்டில் உள்ள புனித அந்தோனியார் உப அஞ்சல் அலுவலகத்தில் தமிழ் மொழியில் எழுதப்படும் தந்திகள், காசுக் கட்டளைகள் நிராகரிக்கப்படுகின்றனவாம். அம்மாவின் ஆட்சியில் தமிழுக்குத் தக்க இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றுகூறும் தபால் அமைச்சர் குமாரசூரியர், தனது நிர்வாகத்தின்கீழ் உள்ள அலுவலகங்களில் நடக்கும் இப்புறக்கணிப்பு பற்றி என்ன பதில் சொல்லப் போகிறாரோ?

## அறமே சொல்க!

குறையென்ன செய்தோமம்மா
கூறம்மா தமிழச் சாதி
நிறைவின்றித் தெருச் சொத்தாக
நித்தமும் அடிமைப்பட்டு
குறையுற்று நாயும், பேயும்
குரங்குமாய் எளிமை செய்ய
அறமென்னும் தாயே! எம்மேல்
அருள் செய்யா திருப்பதேனே?

சிறைமதில் அழைக்கும், போக்கித்
திரும்பவும் நுழைக்கும், வாழ்வை
முறைமுறை சூறை யாடும்
முன்னவன் இராவணேசன்
நிறைமதிற் கோட்டை கட்டி
நீணிலம் ஆண்ட நாட்டில்
அவன்வழி வந்தோன் தம்பி
அடிமையாய் அழிதல் நன்றோ?

ஆரியன் மேற்கு நாட்டான்
அலைவுற்ற காலை அன்று
போர்முறை செய்யேன் உன்னைப்
புதியவன் ஆக்குகின்றேன்
வாவெனக்கூறி வாழ்த்தி
வாழ்வையும் கொடுத்த பின்னர்
நாயென ஆரியன்தான்
நடந்ததும் வரலாறன்றோ?

மென்காற்று புயலாய் மாறி
மேதினி கொல்வதுண்டு
நல்லோட்டநீர் ஊற்று பாய்ந்து
நாடுகள் குடிப்பதுண்டு
வல்லோர்கள் என்போர், புல்லாய்
மாய்வதும் உண்டு இந்த
எல்லோர்க்கும் பொதுவாம் கொள்கை
எமக்குமேன் சரிப்பட்டது.

—அண்ணுதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிமிட நாடகம்

செல்வி — கேட்டியாடி விஷயத்தை அமைச்சர் ஐயா அழுது தீர்த்திருக்கிறார்.

அல்லி — ஏன்?

செல்வி — தமிழ் ராச்சியம் கிடைத்தால் ஹரிஜன மக்கள் நசுக்கப்படுவார்களாம் — கோயில்களில் நுழைய முடியாத நிலை ஏற்படுமாம். என்று நீலிக்கண்ணீர் வடித்திருக்கிறார்.

அல்லி — ஐயோ பாவம்— என்றாலும் அவருடைய அரசியல் நாடகத்துக்கு ஏற்ற விதமாகத்தான் அமைச்சர் நடிக்கிறார் — தாங்கள் தாங்கள் செய்யிறதை வைச்சுத்தான் மற்றவர்களைக் கணக்கெடுப்பாங்க எண்டு சொல்லுறது உண்மையாகத்தான் இருக்குதடி.

செல்வி — கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லனடி.

அல்லி—இலங்கை சுதந்திரம் கிடைக்கிறதுக்கு முந்தி தமிழரும் சிங்களவரும் ஒற்றுமையாக இருந்துதான் ஆங்கிலேயரிடம் சுதந்திரம் கோரினாங்க—ஆனால் சுதந்திரம் கிடைச்சதுக்குப் பிறகு தானேடி தமிழனைச் சிறுபான்மையினம் என்று அவனுடைய உரிமைகளையெல்லாம் பறிச்சு தாங்கள்பெரியவர்கள் என்று கொட்டமடிக்கிறாங்க. அதுபோலதான் தனி ராஜ்சியம் கிடைச்சால் ஹரிஜனர் என்ற சமூகக்குறை பெரிதாக வளர்ந்து ஒற்றுமையீனம் ஏற்படும் என்று சொல்லி தமிழர்களின் ஒரு பிரிவைத் தங்கள் பக்கம் இழுக்கப் பார்க்கிறார்.

செல்வி — இதால தமிழ் மக்களில் சிலர், அதாவது ஹரிஜனர் என்று குறிக்கப்படுகிறவர்கள் தமிழர் விடுதலை கூட்டணியின் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு தரவில்லையென்றுசொல்லியிருக்கிறாரேடி.

அல்லி — அவருக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான் பாவம். என்றாலும் தன் நாட்டு மக்களின் எண்ணங்களை யெல்லாம் புரிஞ்சு இருக்கவேண்டிய அமைச்சர் தெரியாத்தனமாக உளறுவதைப் பார்க்கப் பரிதாப இருக்குதடி.

செல்வி— ஏனடி அப்படிச் சொல்லுறாய்?

அல்லி— இந்தக் கொள்கைக்கு ஹரிசனர் என்று சொல்லப்படுற மக்கள் ஆதரவு இல்லையென்றால்—அவங்களிலேயே எத்தனை இளைஞர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைக்காகச் சிறையில் இருக்கிறார்கள் என்ற விஷயம்கூட அவருக்குத்தெரியாமல் இருக்கிறதே.

செல்வி— கோயில்களில் ஹரிஜனர் ஒதுக்கப்படுவார்களாமே?

அல்லி— அடிபோடி, அவர் விடுற இந்தக் கரடியை நாங்க நம்புறதா? சரி அதிகம் வேணாம், ஆலயப் பிரச்சினை பற்றிப்பேசுற இவங்க கொழும்பில் ஒரு குறிப்பிட்ட ஆலயத்தில் தமிழ் மக்கள் மொழி ரீதியில் புறக்கணிக்கப்படுறது பற்றி என்ன நடவடிக்கையடி எடுத்தாங்க. அதைப்பற்றி ஒரு மூச்சுக்காட்டினாங்களா? ஏன் பேசாமல் இருந்தாங்க மதப் பிரச்சினையில் சுடுபடக் கூடாது என்று? இதுவும் எங்கட மதப் பிரச்சினை— எனவே புத்த மதத்தை அரசாங்க மதமாய் கொண்ட இவங்களுக்கு எங்கட தமிழர் மதமான இந்து மதத்தைப் பற்றியோ, எங்களுக்குள்ள இது பற்றி இருக்கிற பிரச்சினை பற்றியோ பேசுற தகுதியில்லை என்றுதான் நாங்க சொல்லுவோம்—அதனால,எங்க உள் வீட்டுப்பிரச்சினை பற்றி அமைச்சர் ரி. பி. இலங்கரத்தின நீலிக்கண்ணீர் வடிக்கவேண்டிய அவசியமில்லை—

— அற்லஸ்.

# மந்திரி சூரியரின் தந்திரோபாயம்!

## யாழ்ப்பாணத்தான் பிரச்சினைக்கு தூபமிடும் திட்டமா?

தேர்தல் களத்தில் குதிப்பதற்குத் தன்னைத் தயாராக்கிக்கொள்வதற்காகப் பலவிடங்களில் தன் பார்வையைப் பரவவிட்ட திரு. குமாரசூரியர் அவர்கள் கிளிநொச்சித் தொகுதியில் கால் வைத்ததை யாவரும் அறிவர். அத்தொகுதியின் ஒரு பகுதியாகவுள்ள பூநகரில் தமிழரசாருக்கெதிரான தனது கொள்கைப் பிரச்சாரம் சரிப்பட்டு வராது என்பதைப் புரிந்து கொண்ட சூரியர் அவர்கள் பூநகரி மக்களின் நீண்டகாலத் தேவைகளில் ஒன்றான மகாதேவா பாலத் (சங்குப்பிட்டி - கேரதீவு)தை மையமாக வைத்து அவர்களை தன்பக்கமாக இழுக்கலாம்.என நப்பாசை கொண்டார்: மக்களைப் பார்த்து அவர் திருவாய்மலர்ந்தருளுகிறார்: ''மக்களே! உங்களுக்கு நான் இந்த மகாதேவா பாலத்தை நிச்சயம் அமைத்துத் தருவேன் ஆனால் ஒரேயடியாக அல்ல; பகுதிபகுதியாக; 300 அடி வீதம் (அங்குலத்தில் சொன்னால் இன்னும் அதிகமாக இருக்கும்) போட்டுத் தருவேன். உடனடியாக, ஒரே முறையிலே பாலத்தை மூடினால் யாழ்ப்பாணத்தவர்கள் இங்குவந்து உங்களைச் சுரண்டிக்கொண்டு போய்விடுவார்கள்.''

என்னே! அமைச்சரின் ஆராய்ச்சிக்கண்டு பிடிப்பு. சிங்கள ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் கொள்கைக்கு இவர் வக்காலத்து வாங்குகிறாரா? அல்லது உண்மையிலேயே பூநகரி விவசாய மக்கள் மீது அனுதாபப் படுகிறாரா? அனுதாபம் ஆயின் இவ்வாறுபேசியிருக்க நியாயமே இல்லை. பூநாரி இன்று இவ்வளவு தூரம் பின் தங்கி இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் போக்குவரத்து வசதிகள் இல்லாதிருப்பதும், குடாநாட்டின் ஏனைய பகுதிகளுடன்நெருங்கிய பிணைப்பு இல்லாதிருப்பதும், கல்வி வசதி இல்லாதிருப்பதும்தான். பூநகரி விவசாயிகள் தமது மரக்கறி போன்றஉற்பத்திப்பொருட்களை போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் சாவகச்சேரிபோன்ற இடங்களுங்களுக்குக் கொண்டு செல்ல வசதியில்லாது சந்தை வசதியில்லாத, கேள்வி அதிகம் இல்லாத பூநகரியிலேயே மிகமலிந்தவிலைக்கு பொருட்களை விற்று வருகின்றனர்.

(கடந்த வாரங்களில் இங்கு ஒரு இரூ. கத்தரிக்காய் 25 சதமாகவும், பச்சை மிளகாய் 60 சதமாகவும் விற்கப்பட்டது) பாலம் மூடப்பட்டிருந்தால் — நேரடியான பிரயாண சேவை இருந்தால் மக்கள் தாமே வியாபார நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட முடியும். தரமான ஆசிரியர்கள் இங்கு கடமையாற்ற முன்வருவார்கள். இதனால் கல்வி நிலை மேம்பாடுறும். மேலும் பூநகரியில் உள்ள பல்லவராயன்கட்டு, முழங்காவில் போன்ற குடியேற்றத்திட்டங்களின் வளர்ச்சிக்கு இப்பாலம் பெரிதும் கைகொடுத்துதவும். குடாநாட்டின்ஏனைய கிராமங்களுடனும், நகரங்களுடனும் நெருங்கிய பிணைப்பு ஏற்படுத்தப்படுவதால் இப்பகுதி மக்கள் தமது நிலையை பல துறைகளிலும் உயர்த்திக்கொள்ளச் சாதகமாக இருக்கும். சுருக்கமாகக் கூறப்புகின் எவ்வளவு விரைவில் மகாதேவாப் பாலம் அமைக்கப்படுகிறதோ அவ்வளவு விரைவில் பூநகரி முன்னேற்றப் பாதையில் செல்லும் எனலாம். உண்மை இவ்வாறு இருக்க பொறுப்புவாய்ந்த அமைச்சர் ஒருவர் விசமத்தனமாக பிரச்சாரம் செய்வது விசனிக்கப்படவேண்டிய விடயமாகும். பூநகரியின் பெரும்பான்மையான மக்கள் யாழ் வாசிகளுடன் இரத்தத் தொடர்புடைய உறவு முறையான்வர்கள் அமைச்சர் அறிந்தாரில்லைப்போலும்.

— ஈழவாணன்.

# யாழ் நகரசபையும் மேலதிக வரியும்!

யாழ் மாநகர சபையில் மேலதிக வரி "சேர்சாஜ்" போடப்பட வேண்டிய கொள்கைகள் இன்று கணக்கிடப்பட்டு வருகின்றதாம். அவ்வப்போது மாநகரசபையில் ஒற்றர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு வரும் மோசடிக்கு தணிக்கையாளர்கள் மிகு கவனமாக சரி பிழை பார்த்து வருகின்றார்கள். இச் சரி பிழையில் பல சங்கதிகள் அம்பலமாகின்றனவாம். மலிந்தால் சந்தைக்கு வரும் அதுவரை பொறுத்திருப்போம்.

கலியாண மண்டபம், மற்றும் சிலைகள், கூட்டங்கள் சார்பாக காலஞ்சென்ற திரு. துரையப்பாவில் இருக்கும் "சேர்சாஜ்" 45,000 என்று பேசிக்கொள்ளப்படுகிறது. அவர் இறந்த பின் இச்'சேர்சாஜ்' ஒன்றும் அவரை எதுவும் செய்து விடாதென்றும் மற்றொரு விமர்சனம் செய்யப்படுகின்றது:

தற்போதைய விசேட ஆணையாளர் திரு. நடராசாவிலும் சேர்சாஜ் 35.000ம் வரை விசாரணையில் இருக்கிறதாம்.

பதில் ஆணையாளரிலும் முனிசிபல் சபைக்குச் சொந்தமான வாகனத்தைப் பாவித்தாரென்று பெற்ரோல் செலவு உட்பட 2,000-ம் வரை 'சேர்சாஜ்' விசாரணை இருக்கிறதாம்.

இந்தத் திருகுதாளங்களை எவரறிவார். பராபரமே? பார்த்திருக்க மனம் பதறுகிறது. தமிழர் தலைநகரில் இத்தனை தந்தாளித் தனங்களா? — அப்பலோ

# சத்தியப்பிரமாணம் செய்தது சம்பிரதாயத்துக்கே!

## உரிமைகளை அடகுவைக்க அல்ல!

சண்டிலிப்பாய் சிரந்தீபம் என்னுமிடத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் உடுவில் பா. உ. திரு. வீ. தருமலிங்கம் அவர்கள் உரை நிகழ்த்துகையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார். "ஜனநாயக நாடுகளில் சிறுபான்மை மக்களின் மொழியும், சமயமும் பாதுகாக்கப்பட்டு வருகிறது ஆனால் சோசலிசம்பற்றிப் பேசும் நமது அரசாங்கத்தினர் இந்த நாட்டின் சிறுபான்மை மக்களுடைய மதத்திற்கும், மொழிக்கும் எந்த விதமான பாதுகாப்பும் அளிக்க முன்வரவில்லை."

"அரசாங்கத்தின் கொள்கைகளை நாம் ஏற்றுள்ளதாக நாம் சத்தியப்பிரமாணம் செய்தது உண்மை. இது ஒரு சம்பிரதாயமுறை. திரு. பீட்டர்கெனமன், கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா ஆகியோர் சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு இலங்கைக்கு மகாராணி வரும்போது போராட்டம் செய்திருக்கிறார்கள். அதுபோலவே நாமும் சம்பிரதாயமுறைப்படி சத்தியப் பிரமாணம் செய்துள்ளோம். ஆனால் எமது உரிமைகளைப் பெறப் போராடுவோம்."

"மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்கவேண்டும் என்று வெளிநாடுகளில் நடைபெறும் மாநாடுகளில் பேசும் நமது பிரதமர் இங்குவாழும் மக்களின் உரிமைகளை வழங்க மறுத்தது பெரும் விந்தையாகும்."

"வடமாகாணத்தில் உள்ள நீதிமன்றங்களில் தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறிவருகிறது. ஆனால் நீதிமன்றங்களைப் பொறுத்த அளவில் எங்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதே தவிர உரிமை வழங்கப்படவில்லை"

"எங்களுடைய பிரச்சினைகளை நேரடியாகப் பேசித் தீர்க்கலாமே ஒழிய வாக்கெடுப்பு மூலம் தீர்க்கமுடியாது என்று பலதடவை நாம் அரசாங்கத்தைக் கேட்டு வந்துள்ளோம். ஆனால் அவர்கள் ஒன்றுக்கும் செவிசாய்க்கவில்லை. தமிழ் மக்களுடைய உரிமைகள் அரசியல் அமைப்பில் இடம் பெறாவிட்டால் நாம் அடிமைகளாக வாழவேண்டிய நிலை ஏற்படும்.

திரு. ஆர்: டி: கனகரட்ணரசா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பொரலை பா.உ. திருமதி குசலா அபயவர்த்தன அவர்களும் உரைநிகழ்த்தினார்.

### தமிழ்த் தெய்வம் கண்ணகை விழாவில் தமிழர் விடுதலைக் கோஷம்

ஆரையம்பதி கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற குளிர்ச்சிச் சடங்கில் ஆயிரக்கணக்கான இளைஞர், முதியோர், பாலர் பங்கு கொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில், காவடி எடுக்கப்பட்ட போது தமிழ்விடுதலைக்கீதங்கள் பாடப்பட்டதுடன்-மக்களால் எழுப்பப்பட்ட ''தந்தை செல்வா வாழ்க!— அண்ணன் காசி ஆனந்தன் வாழ்க!— ஆண்ட தமிழினம் மீண்டும் ஆள விரும்புகின்றது!'' என்பன போன்ற சுலோக ஒலிகள் கூடிநின்ற மக்கள் வெள்ளத்தை மெய் சிலிர்க்கவைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# தமிழ்த் தலைவர்கள் சொத்துகள் பறிமுதலாக...

—4-ம் பக்கத் தொடர்

**16-6-76 கொழும்பில் தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் செயல் அதிபர்களின் ஒருவரான உடுப்பிட்டி சிவா அவர்கள் நிகழ்த்திய உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

தொடர்ந்து அவர் தன் உரையில்,

1915ம் ஆண்டில் ஆக்கப்பட்ட இச்சட்டம், ஆக்கப்பட்டபோதே சேர். பொன்னம்பலம் ராமநாதன் இது ஒரு நிரந்தரமான சட்டமாக இலங்கையில் இருப்பதை ஆட்சேபித்தார். இச்சட்டம் ஆக்கப்பட்டதின் பின்னர் இதே முறையில் நடக்கும் மூன்றாவது வழக்கே இவ்வழக்காகும்.

முதல் வழக்கு அனுராதபுரத்தில் உள்ள புனிதபோதி மரத்தின் கிளையொன்றினை ஒருவர் வெட்டினார் என்பதற்காகத்தொடரப்பட்டது ஆனால் அவ்வழக்கு குற்றவாளியாகக் காணப்பட்ட நபர் சித்தசுவாதீன மற்றவர் என்பதற்காக தள்ளுபடி செய்யப்பட்டது.

இரண்டாவதாக 1953ம் ஆண்டு அப்பொழுது இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சேர் ஒலிவர் குணதிலகாவைப்பற்றி ஆபாசமான முறையில் திருமதி. தேஜா குணவர்த்தன Trine பத்திரிகையில் எழுதினார் என்பதற்காகத் தொடரப்பட்டது. இவ்வழக்கும் திருமதி தேஜா குணவர்த்தனவுக்குச் சாதகமாகத் தீர்க்கப்பட்டது.

இப்பொழுது எமது தமிழ் தலைவர்கள் மீது தொடரப்பட்டுள்ள இவ்வழக்கே இலங்கை நீதிமன்றச் சரித்திரத்தில் மூன்றாவது வழக்காகும்.

இவ்வழக்கு பெரும்பாலும் ராஜதுரோகம் புரிந்தவர்களுக்கு எதிராகவே தொடரப்படலாம் ஆனால் நாட்டில் அமைதியற்ற, கொந்தளிப்பான நிலைமை நிலவும் கட்டத்தில் நீதி அமைச்சரின் தீர்மானத்தின்படி சாதாரண வழக்குகளும் இம்முறையில் விசாரணை செய்யப்படலாம்.

குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்ட இடம் எதுவாக இருந்தாலும் வழக்கைதாம் நினைத்த இடத்தில் நடத்தும் உரிமை நீதிஅமைச்சருக்கு உண்டு.

அவ்வழக்கின் விசாரணையின் முடிவில், நீதிபதிகள் இவர்களைக் குற்றவாளியாகக் கண்டால் துண்டுப்பிரசுரம் விநியோகித்த குற்றத்திற்காக ஆகக் குறைந்தது 3 மாதம் தொடக்கம் கூடியது 5 வருடம் வரை சிறைத்தண்டனை.

அரசினர்க்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்ட குற்றத்துக்காக ஆகக் குறைந்தது 3 மாதம் தொடக்கம் கூடியது 20 வருடங்கள்வரை சிறைத்தண்டனை.

அத்தோடு குற்றவாளியாகக் காணப்படுபவர்களின் அசையும், அசைவற்ற ஆதனங்களையும் பறிமுதல் செய்யலாம்—அண்மையில் வட்டுக்கோட்டை மாநாட்டில் எடுக்கப்பட்ட தமிழ் ஈழம் சம்பந்தமான அரசியற் பிரகடனத்தை துண்டுப்பிரசுரமாக அச்சிட்டு மே 22ம் திகதியன்று விநியோகித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழர்கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. என். நவரெத்தினம், சாவகச்சேரி பா. உ. திரு. க. துரைரத்தினம், பருத்தித்துறை பா. உ. திரு. க. போ. இரத்தினம் ஊர்காவற்துறை பா. உ. ஆகியோர் இத்தண்டனைகளில் எந்தத் தண்டனை விதிக்கப்பட்டால் அதைத் தமிழ் இனத்தின் விடுதலைக்காக ஏற்கச் சித்தமாக உள்ளனர் என்க்கு குறிப்பிட்டார்.


7-வது வெற்றி வாரம்!

**செல்லமகால்**

சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி,

நடித்த

ஜனாதிபதி விருது பெற்ற

**'அவள் ஒரு தொடர் கதை'**

திரைக் கதை—வசனம்
டைரக்‌ஷன்— கே. பாலச்சந்தர் B.S.c.

தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

3வது வாரம்

**கெபிட்டி**

**றீகல்** (மட்டுநகர்)

ஜெயசுதா - ஜெயசங்கர்,

தங்கவேலு - மனோரமா

· நடித்த ·

**பந்தாட்டம்**

7வது வெற்றி வாரம்

கெப்பிட்டல்—பிளாசா

நடிகர் திலகம் சிவாஜி (இரட்டை வேடம்) உஷா, நந்தினி,
மேஜர் சுந்தரராஜன், நாகேஷ், பண்டரிபாய்,
நடித்த—

**கௌரவம்**

(ஈஸ்ட்மென் கலர்)

**கிங்ஸ்லி**

எம். ஜி. ஆர், பத்மினி நடித்த-

**ராணி சம்யுக்தா**

லிடோ (யாழ் நகர்) 6-வது வெற்றி வாரம்

சிவாஜி, ஜெயலலிதா, விஜயகுமார், சுந்தரராஜன்
—நடித்த

**அன்பைத்தேடி**

(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** 8 வது வாரம்
—யாழ்நகர்

சீர்காழி கோவிந்தராஜன். டி. ஆர். மகாலிங்கம் நடித்த-

**அகத்தியர்**

(கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 13 பண்டாரநாயக்க வீதி ,194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் ஜூன் மாதம் 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.